செ.வெ.எண்: 162 நாள்: 06.03.2020

## தஞ்சாவூர் மானோஜிபட்டி ஜல்லிக்கட்டு போட்டி முன்னேற்பாடு மற்றும் பாதுகாப்பு பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இஆப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், மானோஜிபட்டியில் நடைபெறவுள்ள ஜல்லிக்கட்டு போட்டிக்கான முன்னேற்பாடு மற்றும் பாதுகாப்பு பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இஆப., அவர்கள் இன்று(06.03.2020) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தஞ்சாவூர் வட்டம், நீலகிரி ஊராட்சி, மானோஜிபட்டியில் நடைபெறவுள்ள ஜல்லிக்கட்டு போட்டிக்கான முன்னேற்பாடு பணிகளை பார்வையிட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், மாடுகளுக்கான காத்திருப்பு இடம், வாடிவாசலுக்கு வரும் வழி, ஓடுபாதை ஆகியவற்றை பார்வையிட்டு ஆய்வு செய்தார். தடுப்பு வேலிகளை பலமாக பொருத்தி, பார்வையாளர்களுக்கு போதுமான இடவசதி ஏற்படுத்திட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார்.

போட்டியில் ஜல்லிக்கட்டு மாடுகளை அவிழ்க்கும்போது பின்பற்றவேண்டிய விதிமுறைகள், களத்தில் மாடுபிடி வீரர்களும், மாட்டின் உரிமையாளர்களும் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள் ஆகியவை குறித்து அலுவலர்களிடம் எடுத்துரைத்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், தேவையான இடங்களில் கண்காணிப்பு கேமராக்கள் மற்றும் ஒலிபெருக்கிகள் பொருத்திடுமாறு அறிவுறுத்தினார்.

கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் ஜல்லிக்கட்டு காளைகளுக்கான மருத்துவ குழுக்கள் மற்றும் அவசர ஊர்தி, சுகாதாரத்துறை சார்பில் மாடுபிடி வீரர்களுக்கான மருத்துவ குழுக்கள் மற்றும் அவசர ஊர்திகளை தயார் நிலையில் வைத்திடுமாறு தொடர்புடைய அலுவலர்களிடம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார்.

ஆய்வின் போது தஞ்சாவூர் வருவாய் கோட்ட அலுவலர் திருமதி.வேலுமணி, கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குனர் டாக்டர்.தமிழ்ச்செல்வன், தஞ்சாவூர் நகர காவல் துணைக் கண்காணிப்பாளர் திரு.ரவிச்சந்திரன், அரசு அலுவலர்கள் மற்றும் விழாக்குழுவினர் உடன் இருந்தனர்.

---

செய்தி வெளியீடு : செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.